**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.239/2010**

**தேதி : 11.02.2026**

**(பி.வா.சா.1 ) – திரு . வேலுச்சாமி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– வாதிகள் தரப்பில்)**

1. நான் 3–ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதிகள் எத்தனைபேர், பிரதிவாதிகள் எத்தனைபேர் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் வாதிகள் மூன்றுபேர். பிரதிவாதிகள் எத்தனைபேர் என்றால் நான் மட்டும்தான். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையை நான் படித்துப் பார்த்துள்ளேன். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரை தமிழ் மொழியில் இருந்தது. வழக்குரை என்னுடைய மனைவி எழுத்துமூலமாக விளக்கம் கொடுத்துள்ளாரா என்றால் நான்தான் விளக்கம் கொடுத்துள்ளேன். அந்த விளக்கம் என் பெயரில் கொடுத்துள்ளேனா என்றால் மாசிலாமணியின் பெயரில் கொடுத்துள்ளேன்.

2. வாதிகள் எந்த அடிப்படையில் தாவாச்சொத்தில் உரிமை கோருகிறார்கள் என்றால் பொது மனிதர்களை வைத்து பைசல் பேசியதாகத் தெரிவித்தும், அவர்களது தாத்தா உயில் கொடுத்திருக்கிறார் என்றும் தெரிவித்து உரிமை கோருகிறார்கள். மேற்படி உயிலை நான் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். நீதிமன்றத்தில் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட உயிலை நான் எந்த தேதியில் பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. சுமார் எத்தனை வருடங்கள் முன்பாக பார்த்தேன் என்றால் அதுவும் ஞாபகமில்லை. அந்த உயிலில் யார் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது.

3. அந்த உயிலுக்கு முன்னோடியாக என்ன பத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. ரெங்கசாமி பிள்ளைக்கும், வாதிகளுக்கும் என்ன தொடர்பு என்று கேட்டால் பேரன், பேத்தி உறவுமுறை. ரெங்கசாமி பிள்ளை இவ்வழக்குச் சொத்துக்களை எந்த தேதியில், யாரிடமிருந்து வாங்கினார் என்றால் குழந்தைவேல் என்பவரிடமிருந்து 1975ம் ஆண்டு வாங்கினார்.

கிரையத் தேதி, மாதம் எனக்குத் தெரியாது. 1975ல் ரெங்கசாமி பிள்ளை சொத்தை வாங்கும்போது நான் உடன் இல்லை. அவர் எந்த அடிப்படையில் சொத்தை வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ரெங்கசாமி பிள்ளை என்ன தொழில் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவருடைய மகன்கள் இருவரும் தாவாச்சொத்தில் சேம்பர் தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல, அது வெறும் காடாகத்தான் இருந்தது.

4. ரெங்கசாமி பிள்ளையும் அவருடைய இரண்டு மகன்களும் என்ன தொழில் செய்து வந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. ரெங்கசாமி பிள்ளை எனக்கு அறிமுகமானவரா, கிரையம் வாங்கும்போது அறிமுகமானவரா என்றால் ரெங்கசாமி பிள்ளை எனக்கு எப்போதும் அறிமுகம் ஆகவில்லை. தெண்டபாணிதான் எனக்கு அறிமுகமானவர். தாவாச்சொத்து சம்பந்தமாக ரெங்கசாமி பிள்ளை அவருடைய மகன்களுடன் சேர்ந்து ஏதாவது பாகவிஸ்தி ஆவணம் ஏற்படுத்தி, அந்த ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பாகவிஸ்தி ஆவணத்தை பார்க்கவில்லை, செட்டில்மெண்ட்தான் ஆகியுள்ளது.

5. என் மனைவி மாசிலாமணி பெயரில் 29.11.1993ம் தேதியன்று கிரைய ஆவணம் ஏற்பட்டபோது நான் அதில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரைய ஆவணம் பதிவு செய்துவிட்டு வெளியே வந்து என் மனைவி சொன்னபிறகுதான் எனக்கு கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் என் மனைவிக்காக நான் உடனிருந்து செய்தேன். ரெங்கசாமி பிள்ளை குடும்பமும், நானும் ஒரே பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. தெண்டபாணியிடமிருந்து 3ம் பிரதிவாதியான எனது மனைவி தாவாச்சொத்தைப் பொறுத்து கிரைய ஆவணம் ஏற்படுத்திய நாளுக்கு முன்பு தெண்டபாணியைப் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனக்குத் தெரியும். அவர் எனக்கு எப்படி அறிமுகம் என்றால் நாங்கள் லாரி ஆபீஸ் நடத்தி வந்தோம், தண்டபாணி செங்கல் ஏற்றுவதற்காக லாரி வாடகைக்கு எடுக்கும் வகையில் எனக்கு அறிமுகம்.

6. எங்கு இருக்கிற செங்கலை ஏற்றுவதற்காக லாரியை வாடகைக்கு எடுப்பார் என்றால் எனக்கு தெரியாது. தண்டபாணி செங்கல் சூளை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல, பல சூளைகளிலிருந்து அவர் செங்கல் எடுத்து வந்தார். தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 4 ஏக் 23 சென்ட். 4 ஏக் 23 சென்டுக்கு

நான்குமால் தெரியுமா என்றால் மேற்கு – கொடைக்கானல் ரோடு, வடக்கு – ஆறு, தெற்கு – வண்டிப்பாதை, கிழக்கு திசையில் செக்கு பந்தி மறந்துவிட்டது. தாவா சொத்தின் சர்வே எண் என்றால் பழைய எண்.326/1B. புது சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியவில்லை. என் மனைவிக்காக வழக்கில் எதிருரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அந்த எதிர்உரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். எதிருரை தமிழில் இருந்தது. வாதிகளின் தாத்தா ரெங்கசாமிபிள்ளை வாதிகளுக்காக 29.09.1986 ஆம் தேதி ஒரு பஞ்சாயத்து பேசி தாவா சொத்து சம்மந்தமாக சமரசத் தீர்வு ஏற்பட்டது என்றால் அது பொய். அந்த சமரசத் தீர்வின் அடிப்படையில் 29.05.1987 அன்று வாதிகள் மூவருக்கும் தாவா சொத்தைப் பொறுத்து ரெங்கசாமிபிள்ளை ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் அதுவும் பொய்.

7. பஞ்சாயத்து சமரசத் தீர்வு, உயில் சாசனம் எதன் அடிப்படையில் பொய் என்று சொல்கிறேன் என்றால் 1980 ஆம் வருடம் ரெங்கசாமிபிள்ளை, தண்டபாணிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதால், மேற்படி ஆவணங்களை பொய் எனக் கூறுகிறேன். தாவா சொத்து முழுவதும் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் ரெங்கசாமிபிள்ளையின் பாகத்தை தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார். ரெங்கசாமிபிள்ளைக்கு இவ்வளவு தான் பாகம் என எந்த ஆவணம் மூலம் அறிந்துகொண்டேன் என்றால் குழந்தைவேல் மூவருக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் அறிந்துகொண்டேன். என்னிடம் காட்டப்படும் 3–ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை எப்போதாவது பார்த்துள்ளேனா என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது.

8. அது எங்களுடைய ஆவணம் இல்லை என்பதால் தான் எனக்கு அந்த ஆவணத்தை தெரியவில்லை என்று சொன்னால் எனக்கு ஆங்கிலமே படிக்கத் தெரியவில்லை. எனது தரப்பில் எத்தனை ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. சுமார் 10, 15 ஆவணங்கள் இருக்கும். மேற்படி ஆவணங்களை நான் படித்துப் பார்த்தேனா என்றால் தமிழில் இருப்பதை படித்துப் பார்த்துள்ளேன், ஒரு சில ஆவணங்களைப் படித்துப் பார்த்தேன்.

9. எனது மனைவி 3-ம் பிரதிவாதிக்கு சொத்து வாங்கப்பட்ட விதம், சொத்து யாரிடமிருந்து வாங்கினார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் அவருக்கு தண்டபாணியை மட்டும் தெரியும், வேறு எதுவும் தெரியாது. எனது மனைவி எனது பெயரில் சேம்பர் நடத்துகிறாரா அல்லது அவரது பெயரில் சேம்பர் நடத்துகிறாரா என்றால் எனது மனைவியின் பெயரில் சேம்பரை நான் முன்னின்று நடத்துகிறேன். வழக்கு சம்மந்தப்பட்ட உயில் ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் நான் பார்க்கவில்லை. அந்த உயில் விபரம் பற்றி எனக்கு தெரியாது என்றும், அதில் சாட்சிகள் யார் என்று எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரிதான். அந்த உயிலுக்கு முன்பு ரெங்கசாமிபிள்ளை எழுதிவைத்த சமரசப் பத்திரத்தைப் பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

10. எனது மனைவி வழக்கின் தரப்பினராக இருக்கும் நிலையில், அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிப்பதற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் எனது மனைவி இல்லத்தரசியாக இருக்கிறார், சேம்பர் கணக்கு வழக்குகளை நான் பார்த்து, அவரிடம் ஒப்படைத்து வருகிறேன், எனவே நான் சாட்சியம் அளிக்கிறேன். உயில் ஆவணம் மோசடியானது என தெரிந்த பின்பு நான் மேற்படி மோசடி ஆவணத்தை தயார் செய்து விட்டார்கள் என காவல் நிலையத்தில் வாதிகள் மீது புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 06.09.2008 அன்று வாதிகள் தாவா சொத்தில் தங்களுக்கு உள்ள பங்கினைக் கேட்டு எனது மனைவிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா இல்லையா என்பதை எனது மனைவியிடம் தான் கேட்கவேண்டுமென்றால் கேட்கவேண்டியதில்லை.

11. 2008 அக்டோபர் மாதம் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்பு நானும், எனது மனைவியும் காவல்துறை ஆய்வாளர் நாகராஜ் மூலம் வாதிகளுக்கு ரூ.1 லட்சம் கொடுத்து சமரசமாக செல்லுமாறு சொன்னோம் என்றால் சரியல்ல. வாதிகள் அவர்களுக்கு உயில்படி பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது மனைவியிடமும், என்னிடமும் பிரித்துக்கொடுக்கக் கேட்டதால் அவர்களை விரட்டிவிட்டதாகச் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ரெங்கசாமிபிள்ளையின் முழு வருமானத்தின் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால் அது எனக்கு தெரியாது. ரெங்கசாமிபிள்ளை கிரையம் வாங்கியதன் அடிப்படையில் தான் அவர் 3-ல்

1 பங்கை மட்டும் 1980 ஆம் வருடம் தண்டபாணிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அவருக்கு 3–ல் ஒரு பங்கு தான் இருக்கிறது, ஒரு பங்கை கொடுத்தார். தாவா சொத்து சம்மந்தமாக நான் எந்த ஆவணங்களையும் ஆராயாமல் மோசடியாக சொத்தின் உரிமையைப் பெற்றுள்ளதாகச் சொன்னால் சரியல்ல.

12. ரெங்கசாமிபிள்ளை 3–ல் 1 பங்கை மட்டும் தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மீதமுள்ள 3–ல் 2 பங்கை வாதிகளுக்கு முறைப்படி உயில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த உயில் ரெங்கசாமிபிள்ளையின் இறப்பிற்குப் பின் ஊர்ஜிதத்திற்கு வந்தது என்றால் சரியல்ல. அந்த உயில் ஊர்ஜிதத்திற்கு வந்ததால் தாவா சொத்துக்கள் வாதிகள் மூவருக்கும் சட்டப்படி பாத்தியமானது என்றால் சரியல்ல. உயில் எழுதிக்கொடுத்த பின்பு நான் 6 வருடம் கழித்து 1993 ஆம் வருடம் எனது மனைவி பெயரில் தாவா சொத்துக்கள் மோசடியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே உயில் இருப்பதினால் நான் எனது மனைவி பெயரில் ஏற்படுத்திய மோசடியான ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்தவரையில் செல்லுபடியாகக்கூடிய ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

13. தாவா சொத்தில் ரெங்கசாமிபிள்ளையும், அவருக்குப் பின்னிட்டு அவருடைய இரண்டு மகன்களான குப்புராஜ் மற்றும் தண்டபாணி தான் சேம்பர் தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல, அது காடாக இருந்தது, அதில் நாங்கள் சில காலம் சோளமும் விவசாயம் செய்து வந்தோம். நான் எந்த வருடம் சோளம் விவசாயம் செய்து வந்தோம் என்றால் 2005 வரை செய்து வந்தோம். நான் சோளம் விவசாயம் செய்து வந்தது என்பது பொய் என்றும், நான் எனது மனைவியை அதிகாரப்பூர்வ பங்குதாரராக சேர்த்து குப்புராஜ் மற்றும் தண்டபாணியுடன் சேர்ந்து செங்கள் சூளையை இயக்கி வந்ததாகச் சொன்னால் சரியல்ல. அப்படி சேம்பர் இயக்கி வந்ததால் தான் எனது லாரி கம்பெனியில் உள்ள லாரியை வைத்து செங்கல் எடுத்துச் சொன்னதாகச் சொன்னால் சரியல்ல. நான் எனது ஆள்பலம், அதிகார பலத்தை வைத்து 1, 2 பிரதிவாதிகளை வெளியேற்ற முயன்றதாகச் சொன்னால் சரியல்ல.

14. எங்களுக்குள் ஏற்பட்ட மனஸ்தாபத்தின் அடிப்படையில் 2–ம் பிரதிவாதி குப்புராஜ்

வெளியேறி விட்டார் என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி என்னுடைய கைப்பாவையாக இயங்கி வந்ததால் தான் வாதிகள் அதனை ஆட்சேபித்து தாவா சொத்தின் மீது பிரச்சனை எழுப்பினார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் எனது மனைவியோ, நானோ சட்டப்படி எந்தவித எதிர்வாதமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதிலும், நான் தாக்கல் செய்துள்ளதாகச் சொல்லப்படும் எதிர்வழக்குரையிலும் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் வாதிகள் தரப்பில் என்ன பரிகாரம் கோரியிருக்கிறார்கள் என்ற விபரம் தெரியாமலேயே எதிர்வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

15. வாதிகள் தரப்பில் அவர்களுக்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்திருக்கிறேனா என்றால் ஞாபகமில்லை. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணங்களையும் பார்க்காமல் தான் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வழக்கறிஞர் அதைப் பார்த்துக்கொள்வார். வழக்கு சம்மந்தப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது வழக்கறிஞர் தான் தாக்கல் செய்தார் என்றால் அப்படி இல்லை, வழக்கில் அவர் என்ன செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். ஒரு சில சங்கதிகளை நான் செல்வேன், ஒரு சில சங்கதிகளை எனது வழக்கறிஞர் சொல்வார். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் எந்த இடத்திலும் ரெங்கசாமிபிள்ளைக்கு தாவா சொத்தில் எத்தனை பங்கு உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவர் தண்டபாணிக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்பதால் நான் அதைப்பற்றி கூறவில்லை.

16. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை மறுத்து எந்த வாசகமும் சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை, ஞாபகமில்லை. இந்த வழக்கில் முழுமையான சங்கதிகள் தெரிந்தது எனது மனைவி தான் என்றும், அவரை சாட்சி சொல்ல அனுமதித்தால் வாதிகளின் உரிமை பற்றிய விபரம் தெரியவந்துவிடும் என்பதால் நான் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் சட்டப்படியான ஆவணங்கள் இல்லை என்பதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.02.11 19:52:17 +0530